JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 471/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | PW.1 தினேஷ்குமார் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.01.2021–ம் தேதியன்று நிலைய உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் என்பவர் என்னையும், முதல் நிலைக் காவலர் மாதய்யன் என்பவரையும் அழைத்துக் கொண்டு, நிலைய சரகத்தில் மதுவிலக்கு சம்பந்தமான குற்றங்களை தடுக்கும் பொருட்டு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காமநாயக்கன்பாளையம் ரோட்டில் உள்ள முத்தாலம்மன் கோவில் அருகில் உள்ள முட்புதரில் கண்காணித்த போது, அங்கு சந்தேகபடும் வகையில் கையில் பையுடன் நின்றிருந்த ஆஜர் எதிரி எங்களை பார்த்தவுடன் ஓடி ஒளிய முயன்றவரை சுற்றிப் பிடித்து அவர் கையில் இருந்த பையை சோதனை செய்தபோது, பையில் சுமார் 180 ML அளவுள்ள EXPRESS BRANDY பாட்டில்கள் 10 மற்றும் மது விற்ற பணம் ரூ.1500/– வைத்திருந்தார். அப்போது அவரிடம் விசாரித்த போது தனது பெயர் ராஜு என்கின்ற M.G.R என்றும், தனது முகவரியையும் கூறியவர், அரசு மதுபானங்களை வாங்கி, தனது சுய லாபம் கருதி, அதிக விலைக்கு விற்பதாகவும், அரசு அனுமதியின்றி மேற்படி மது பாட்டில்களை விற்பனை செய்து வருவதாகவும், தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி, உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி உதவி ஆய்வாளர் கைது செய்தார்.

பின்னர் காலை 10:45 மணிக்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் நானும், என்னுடன் இருந்த காவலர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர்

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:29:54 +0530

மூலம் மேற்படி மதுபாட்டில்களை உதவியாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கைப்பற்றிய வழக்குச் சொத்து மற்றும் கைது செய்த எதிரியுடன் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு நிலையம் வந்து உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண். 25/2025 சட்டப்பிரிவுகள் 4(1)(C) OF TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால், சரிதான். நான் விசாரணை செய்யும்போது பொதுமக்கள் அருகில் இருந்தார்கள் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் பையை கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல. கைப்பற்றினோம். மேற்படி பையை இந்த வழக்கில் தாக்கல் செய்ததாக எனது உயர் அதிகாரியிடம் நான் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால், தாக்கல் செய்தார். கைப்பற்றுதல் மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால், சரிதான். கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து நகல் எடுக்கப்பட்டது என்றால், சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மது பாட்டில்களின் மதிப்பு குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மது பாட்டில் கைப்பற்றும் போது சீல் எதுவும் வைக்கவில்லை என்றால், சரிதான். மது பாட்டில்கள் கைப்பற்றும் போது, வீடியோ பதிவு எதுவும் எடுக்கவில்லை என்றால், சரிதான். எனது உயர் அதிகாரி புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:30:01 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani